**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 14.11.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேசிய குழந்தைகள் தினம்

தேசிய குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மேசனேஜ் கிளப், முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ், அவர்களின் தலைமையில் ஸ்மைல்ஸ் அண்டு ஸ்பார்கில்ஸ் 2025 நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தியது. இதன் ஒரு பகுதியாக, கிளப் தன்னார்வலர்கள் அரசு தொடக்கப்பள்ளியைச் சந்தித்து, 1 முதல் 5ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகளை நடத்தினர்.

வரைகலை, கார்ட்டூன் அடையாளம், தவளை ஓட்டம், ம்யூசிக்கல் செயர் போன்ற பிரபலமான மற்றும் மகிழ்ச்சியான போட்டிகள் நடத்தப்பட்டன. குழந்தைகள் உற்சாகமாக பங்கேற்று தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். ஒவ்வொரு போட்டியிலும் வென்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு அவர்களின் ஆற்றலை ஊக்குவிக்கும் வகையில் பாராட்டப்பட்டது.

இந்த நிகழ்வு தலைமை ஆசிரியர் திருமதி கே.பி.ரதினமாலா மற்றும் ஆசிரியர் திருமதி கே.தாரணி அவர்களின் ஒருங்கிணைப்பில் சிறப்பாக முடிந்தது.

குழந்தைகளின் நலன், ஊக்குவிப்பு மற்றும் சமூக பங்களிப்பை வலுப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி, மாணவர்களின் மனதில் மகிழ்ச்சியும் மினுமினுப்பும் நிறைந்த ஒரு நினைவை உருவாக்கியது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**